Registered as Newspaper at the G. P. O. Under No. Q. B. 8935/78

# மனிதன்

மனிதன்
அஞ்சல்பெட்டி
எண் 81
யாழ்ப்பாணம்

விலை சதம் 50

ஆத்மா 2 | இராகம் 12 | யூன் 1979 | பக்கங்கள் 12

# கைதடிக் கலவரம் ஒரு கண்ணோட்டம்

தமிழ் ஈழத்தில், வடக்கு கிழக்கு மாகாணங்களில் குறிப்பாக யாழ்குடாநாட்டில், சாதிப்பிரச்சினையையும், அதன் தாக்கத்தையும், அதற்கு எதிரான போராட்டங்களையும், அதன் பாதிப்புகளையும், பலாபலன்களையும் நாம் அனைவரும் அறிவோம். தீண்டாமை என்பது ஒற்றுமையை வேரறுக்கும் பகைமையின் மறு உருவம். இதற்கு எதிரான போராட்டம் அன்றும், இன்றும் ஆங்காங்கே நடந்து, நடைபெற்று வருகின்றது. நாளையும் நடைபெறும் முரண்பாடுகள் இருக்கும்வரை இது தவிர்க்க முடியாதது இத்தகைய ஒரு போராட்டத்தைக் கைதடி வாழ் ஒடுக்கப்பட்ட மக்கள் நடத்தி வருகிறார்கள்.

இந்தப் போரரட்டத்தை அவர்கள் அணுகியவிதம் மிகவும் சிறப்பானதாகும் அமைதியான முறையில் அகிம்சைக்கு இடம் கொடுத்தும், அதேவேளையில் அடக்குப்படாமல் அடிகொடுத்தும் இப்போராட்டத்தை அவர்கள் நடத்துகிறார்கள். தீண்டாமை என்னும் வேண்டாமை ஒரு புரட்சிகர சமுதாய மாற்றத்தால் அன்றி இந்த முதலாளித்துவ அமைப்பு முறையில் அழிக்கமுடியாதது என்றும் புரட்சிகர சோஷலிச சமுதாயத்தை நோக்கி நடைபோடும். பாதையில் இத்தகைய சீர்திருத்த நடவடிக்கைகளும், போராட்டங்களும் தவிர்க்கமுடியாதவை—மேற்கொள்ளப்பட வேண்டியவை.

1952-ம் ஆண்டில் இருந்தே அவர்கள் சமூக ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தைத் தொடங்கினார்கள் ஒடுக்கப்பட்ட பெண்மணிகள் குறுக்குக் கட்டுக் கட்டுவதற்கு நிர்பந்திக்கப்பட்ட காலமது இப்பொழுதும் சில பின்தங்கிய கிராமங்களில் இந்த நிலைமை இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. ஆனால் கைதடி வாழ் ஒடுக்கப்பட்ட மக்கள் இந்தச் சமூககுறைபாட்டுக்கு எதிராகப் போராடி வெற்றி பெற்றார்கள். அதோடு 1956-ம் ஆண்டு அவர்கள் கிராமச் சபைத் தேர்தலில் போட்டியிட்டு சிறிய நிலச்சுவாந்தரான உடையார் என்பவரைத் தோற்கடித்து ஆறு வட்டாரங்களில் ஒன்றைப் பெற்றுக் கொண்டார்கள். இந்த வெற்றியானது அவர்களைப் பொறுத்தவரையில் மாபெரும் வெற்றியாகும் ஏனெனில் ஒடுக்கப்பட்ட மக்கள் தலை நிமிர்ந்து பேசமுடியாத காலத்தில் இப்புரட்சிகர மாற்றம் நடந்தது. 1960ல் நடந்த கிராமச்சபைத் தேர்தலில் இரண்டு வட்டாரங்களில் அவர்கள் வெற்றி பெற்றார்கள். கைதடியில் ஒடுக்கப்பட்ட மக்கள் பெரும்பான்மையாக இருந்தும் இரண்டு வட்டாரங்களில் மாத்திரம் வெற்றிபெற்றது ஒடுக்கப்பட்ட மக்களின் மத்தியில் பரந்த அளவிலான ஒற்றுமை இருக்கவில்லை என்பதை எடுத்துக் காட்டுகிறது. ஒடுக்கப்பட்டவர்களில் பலர் அக்காலத்தில் ஒடுக்குவோர் பக்கம் சார்ந்திருந்தமை பொருளாதார ரீதியிலான பாதகமான நிலைமை என்பது தெளிவாகிறது.

இவ்வாறு பொருளாதார ரீதியில் பின்தங்கி, ஒடுக்குவோரின் தயவில் தங்கி வாழ நேர்ந்தாலும் கைதடி ஒடுக்கப்பட்ட மக்கள் தங்கள் மனித உரிமைக்காகத் தொடர்ந்து போராடி வந்திருக்கிறார்கள் என்பது மிகவும் பாராட்டிற்குரியதாகும் குறிப்பாக இம் மக்கள் எந்த அரசியல் கட்சிகளின் தலையீடுமின்றி தமது சுயசிந்தனையின் மூலம், தமது காலில் நின்று போராடியது மிகமிக விசேடமானதாகும். இத்தகைய தொடர்ச்சியும் வளர்ச்சியுமான ஒரு போராட்டந்தான் இன்றைய காலகட்டத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தில் மேலோங்கி நிற்கும் சமூக ஒடுக்கு முறைக்கு எதிரான ஒரு கலவரமாகும்.

கைதடி வடக்கு மயிற்பிட்டி கந்தசாமி கோவிலில் ஒடுக்கப்பட்டோர் உரிமைப் போராட்டம் நடத்தத் தீர்மானித்தார்கள். ஆனால் அவர்களது போர்க்கோலத்தை அறிந்த உயர்மட்டம் கோவில் திருப்பணி வேலையைத் தொடங்கித் திருவிழா நடைபெறவிடாது நிறுத்தி விட்டது. இதனால் போராட்டம் தடைப்பட்டு விட்டது.

அதேபோல இவ்வருடம் மாசிப்பகுதியில் சமூககுறைபாட்டிற்கெதிரான ஒரு போராட்டம் இடம்பெற்றது. உயர்மட்டத்தவர் ஒருவரின் மரணச் சடங்கிலிருந்து இப்போராட்டம் ஆரம்பமானது. உயர்மட்டத்தவர்களின் மரணச் சடங்கில் ஒடுக்கப்பட்டவர்கள் கட்டைக் குத்தி தறிக்கும் வேலையைச் செய்யக்கூடாது என்பதை முன் வைத்ததோடு, ஒடுக்கப்பட்ட பெண்கள் உயர்மட்டத்தவர்களுடைய வீடுகளில், மனிதத்தன்மையை - மனித மாண்பை மாசுபடுத்தும், அடிமைத்தனமான (உயர்மட்டத்தவர் வீடுகளில் மாவிடித்தல், [illegible] போன்ற இன்னோரன்ன) வேலைகளைச் செய்யக்கூடாதெனவும் திட்டமிடப்பட்டது. இதன்படி ஒரு இறுக்கமான எதிர்ப்பை ஒடுக்கப்பட்டவர்கள் காட்டினார்கள் இதை முறியடிக்கும் முயற்சியில் உயர்மட்டத்தவர்கள் முழுமூச்சாக ஈடுபட்டார்கள் இதனால் தங்களுடைய பொதுப் பணிகள் வீடுகட்டுதல் போன்ற கட்டட வேலைகளை ஒடுக்கப்பட்ட மக்கள் செய்யவிடாது தடுத்தார்கள் பொருளாதாரத் தடையை ஒடுக்கப்பட்டவர்கள் மேல் திணிப்பதன் மூலம் அவர்களுடைய உரிமைப்போராட்ட உணர்வை முறியடிக்க முனைப்பாகச் செயலாற்றினார்கள் உயர்மட்டத்தவர்கள்.

ஆனால் உரிமைக்குரலெழுப்பும் ஒடுக்கப்பட்டவர்கள் உற்சாகம் குன்றிவிடவில்லை பொருளாதாரத் தடை நடவடிக்கைக்குப் பதிலடியாக உயர்மட்டத்தவர்களுடைய தோட்டங்களில் தாங்கள் வேலை செய்வதில்லை என்ற முடிவிற்கு வந்தார்கள் இந்த முடிவு ஒடுக்கப்பட்டவர்களுடைய வயிற்றிலடிக்கும் ஒரு முடிவாக இருந்தாலும், தன்மானத்தை இழக்க அவர்கள் விரும்பவில்லை இதன் எதிரொலியாகத் தங்களுடைய குத்தகைத் தோட்டங்களையும் நசுக்கப்பட்டவர்கள் இழக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இத்தகைய ஒரு பதற்றமான நிலைமை ஒடுக்குவோருக்கும், ஒடுக்கப்படுவோருக்கும் கஷ்டமான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தியது ஒடுக்கப்பட்டவர்கள் தொழில் வாய்ப்புக்களை இழந்து பட்டினி கிடக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. ஒடுக்குவோர் தமது தோட்டங்களில் வேலை செய்வதற்கு ஆட்களின்றிப் பயிர்செய்ய முடியாத ஒருநிலை ஏற்பட்டது. வெளியில் இருந்தும் ஆட்களை எடுக்கமுடியாது அவர்கள் திண்டாடினார்கள். இங்கு கவனிக்கத்தக்க ஓர் அம்சம் என்னவெனில், கைதடியைப் பொறுத்தவரை ஒடுக்கப்படும் தமிழ் மக்களே ஒடுக்குவோரை விடப் பெரும்பான்மையாக (ஏறத்தாழ 60%) இருந்தபோதிலும், அங்குள்ள 75 வீதத்திற்கும் அதிகமான பயன்படு காணிகள் ஒடுக்குவோர் வசமே உள்ளன. இதனால், எப்படிப் பார்த்தாலும் இருபகுதியினர்க்கும் கஷ்டமான ஒருநிலை இருந்தது. அதிலும் குறிப்பாக ஒடுக்கப்பட்டவர்களுக்கும் கூடுதலான கஷ்டம் ஏற்பட்டது.

இதனால் இருபகுதியினரும் ஒரு சுமுகமான முடிவுக்கு வரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது இந்த முடிவு உதவி அரசாங்க அதிபரின் தலைமையில் நடந்தேறியது இதன்படி முன்புபோல் ஒடுக்கப்பட்டவர்கள் கட்டட ஒப்பந்த வேலைகள் செய்ய அனுமதிக்கப்பட்டனர். அதேபோல உயர்மட்டத்தவர்களது தோட்டங்களில் தாம் கூலிக்கு வேலை செய்வதாகவும் ஒடுக்கப்பட்டவர்கள் ஒப்புக்கொண்டனர். ஆனால் கட்டைதறித்தல், ஒடுக்கப்பட்ட பெண்கள் உயர்மட்டத்தினருடைய வீடுகளில் தொண்டு துரவு வேலைகள் செய்தல் என்பன நிறுத்தப்பட்டன.

இது இவ்வாறு இருக்க, இப்போராட்டத்தில் ஒருசில ஒடுக்கப்பட்ட குடும்பத்தினர் கலந்து கொள்ளாது உயர்மட்டத்தவர் பக்கம்சார்ந்து நின்றனர்; இது ஒரு பெரும் சமூக விரோத நடவடிக்கை என்பது மறுக்க முடியாதது என்றாலும், உயர்மட்டத்தினரைச் சார்ந்து நின்றுதான் தாங்கள் வாழமுடியும் என்ற எண்ணமும், அதற்குச் சாதகமான சூழலும், கல்வி அறிவின்மையும் இதற்குக் காரணமாயிருந்தன என்பதையும் மறுப்பதற்கில்லை; தாங்கள் நசுக்கப்படுகின்றனர், தங்களுடைய மனித உரிமைகள் மறுக்கப்படுகின்றன. தங்கள் நிலை தாழ்ந்துள்ளது என்பதை அவர்கள் உணரமுடியாத அளவிற்கும், உணர்ந்தாலும் செயல்பட முடியாத அளவிற்கும் ஒரு நிலைமை இருக்குமாயின், அது அந்தச் சூழலுடையவும், சமூக அமைப்பினுடையவும் கொடுமைத்தனத்தைத்தான் உணர்த்துகிறது. இத்தகைய சமூகவிரோத நடவடிக்கையில் இறங்கிய ஒடுக்கப்பட்டவர்களை விடுதலை உணர்வுகொண்ட ஒடுக்கப்பட்டவர்கள் தங்கள் சபைசந்திகளில் இருந்து ஒதுக்கி வைத்துள்ளார்கள். பழிவாங்கும் பாவனையில் அல்ல; ஒரு பாடம் புகட்டும் நடவடிக்கையாக இதை மேற்கொண்டுள்ளார்கள். அத்தோடு இந்நடவடிக்கை தற்காலிகமானதும் ஆகும். கைதடி மேற்கில், இவர்களில் சிலர் மனம்திரும்பி விடுதலை உணர்வுகொண்ட ஒடுக்கப்பட்டவர்களோடு ஐக்கியப்பட முயற்சி எடுத்தும் அவர்கள் இன்னும் தள்ளியே வைக்கப்படுவது விசனத்திற்குரியது;

இதைத்தொடர்ந்து இவ்வருடம் மே மாதம் மூற்பகுதியில் கைதடி கிழக்கு பிள்ளையார் கோவிலில் பிரச்சினை ஏற்பட்டது. இக்கோவில் எல்லோருக்குமாகத் திறந்துவிடப்பட்ட போதிலும் திருவிழா வைபவங்களில் சில சிக்கல்கள் இருந்தன. தேரிழுக்கும் வைபவத்தில் ஒடுக்கப்பட்டவர்கள்பங்குகொள்ள முடியவில்லை. அதாவது தேர்வடத்தை இழுக்க நசுக்கப்பட்டவர்கள் அனுமதிக்கப்படவில்லை, சாமி காவவும் அனுமதிக்கப்படவில்லை; தேர்த்திருவிழாவின் போது சைவ ஆசார சீலர்களாக நின்ற ஒடுக்கப்பட்டவர்கள், தேர்க்கயிற்றைத் தாங்களும் பிடித்து இழுக்க வேண்டுமென்று உரிமைக்குரல் எழுப்பினார்கள். அன்று காலை 7 மணி அளவில் குருக்கள் சாமியைத் தேரில் கொணர்ந்து வைத்தார். தேரில் வைத்து இழுக்கும் நேரத்தில் பிரச்சினை வலுத்துக் கொண்டது. தேர் இழுப்பதென்று ஒருவாறாக கோவிலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தொண்டர்களாகப் பணிபுரிந்து இருக்கவேண்டும் என்ற நிபந்தனை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் தொண்டர்களாகப் பணிபுரியாத வெளியூர்க்காரர்கள் சிலர் தொண்டர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டுச் சுட்டிக் காட்டப்பட்டதுடன் பிரச்சனை மேலும் சிக்கலாகியது. இதில் ஒரு விசேடம் என்னவென்றால், தொண்டர்களாகப் பணிபுரிந்தவர்கள் பட்டி அணிந்திருந்தார்கள்;

உண்மையில் இந்தப்பட்டி தொண்டர்களுக்குக் கொடுக்கப்பட்ட பட்டியாக இல்லாமல், தொண்டர் அல்லாத ஒடுக்கப்பட்டவர்கள் தேர் இழுப்புச் சடங்கில் கலந்து விடுவார்கள் என்ற காரணத்தால் ஒடுக்கப்பட்டவர்களை அடையாளங் காணக் குத்தப்பட்ட பட்டியாகும். இந்தக் கபட நாடகமும் பலிக்காமல் போய்விட்டது. மனத்திலே படிந்துகிடக்கும் சாதித்திமிர் பட்டி உருவத்தில் தோற்றம் அளித்தது நகைப்புக்கிடமானதாகும்.

திருவிழாவை எப்படியும் நடத்திமுடிக்கவேண்டும் என்ற துடிப்பால், மேல்மட்டம் குறிப்பாகக் கோவில் நிர்வாகம் காவல் துறையினரிடம் (பொலிசிடம்) அடைக்கலம் புகுந்தது: காவல்துறையினர் வந்து. நிலைமையை ஆராய்ந்து அறிந்து ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பாகத் தீர்ப்பினை வழங்கினர். இந்த நடவடிக்கை உயர்மட்டத்தவர்களுக்குப் பலத்த அடியாக அமைந்தது. ஏ. எஸ். பி காவல்துறை, கே. வி. நித்தியானந்தா பனம்பொருள் கூட்டுத்தாபனம், க. சச்சிதானந்தன் செயலாளர் அறங்காவல் நிலையம் போன்றவர்கள் நிலைமையைச் சமாளிக்க முற்பட்டார்கள்; இதனால் ஓர் அமைதியான நல்ல முடிவு ஏற்படும்போல் தோன்றியது;

ஆனால் அயோக்கியர்கள் ஒரு சிலரின் விடாப்பிடியான தலையீட்டால் நிலைமை மேலும் சீர் கெட்டது. பாரத, இராமாயணப் போருக்கு சகுனி, மந்தரை போன்றவர்கள் எவ்வாறு காரணமாக இருந்தார்களோ அவ்வாறே இப்பிரச்சனைக்கும் சிலர் காரணமாக இருந்தார்கள். இந்த நேரத்தில் கோவிற்சபை உறுப்பினர்களுள் ஒருவரும் சமாதான நீதிபதியும் கைதடி கூட்டுறவுப் பிரமுகருமான ஒருவர் சாதிவெறி தலைக்கேறி, "கோவில் நிர்வாகம் ஒடுக்கப்பட்டவர்கள் தேர் இழுப்பதை ஒப்புக்கொள்ளவில்லை" என்ற காட்டுமிராண்டித் தனமான காரணத்தைக் காட்டிப் பிரச்சனைக்கு மேலும் எண்ணெய் ஊற்றினார், நேரம் மதியம் பன்னிரண்டு ஆனது. இந்த நேரத்தில் குருக்கள் சாமியைத் தேரிலிருந்து இறக்கிக் கோவிலுக்குள் கொண்டு சென்றார். இந்தக் காட்சியைச் சகிக்க முடியாத திரு. சச்சிதானந்தம் அவர்கள் கண்ணில் நீர்மல்க, "இரு சகோதரர்கள் தங்களுக்குள் சண்டை செய்வதைச் சகிக்கமுடியாத தெய்வம் மனமுடைந்து தன் இருக்கைக்குத் திரும்பி விட்டது" என்று கூறினார். அத்தோடு திருவிழாவும் இடை நிறுத்தப்பட்டது. இந்த நிகழ்வுகளில் திரு. சச்சிதானந்தன் அவர்கள் இதய சுத்தியோடு நடந்துகொண்டார் ஒடுக்கப்பட்டவர்களின் உள்ளத்தில் அவர் உயர்ந்த இடத்தைப் பிடித்துக் கொண்டார். ஆனால் உயர் மட்டம் அவர்மேல் எரிந்து விழுந்தது.

ஈற்றில் இப்பிரச்சனை தீர்க்கப்படாமல், ஒரு முடிவிற்குக் கொண்டுவரப்படாமல் விடப்பட்டுள்ளது. தமிழ் அரசியற்கட்சிக்காரர்கள் மேடைகளில் எப்படித்தான் பேசிய போதிலும் அதைத் தீர்த்துவைப்பதில் அவர்களுக்குள்ள தயக்கமும் காலதாமதமும் அவர்களை இனங்கண்டுகொள்ள வாய்ப்பாக உள்ளது. பாராளுமன்றக் கதிரைப் - பாதையைப் பரம்பரைச் சொத்தாக மார்க்கமாகக் கருதுபவர்களுக்குப் பெரும்பான்மை மக்களின் ஆதரவு வேண்டுமல்லவா? அந்த ஆதரவை அவர்கள் இழக்கத் துணியமாட்டார்கள் என்பது உறுதியானது. என்றாலும், கைதடி வாழ் ஒடுக்கப்பட்டவர்கள் எத்தகைய துன்பங்கள் எதிர்நோக்கி வந்தாலும் அதற்கு முகங்கொடுக்கத் தயாராக உள்ளார்கள். ஆங்காங்கே சில அரசியல் கட்சிகளின் பிடிப்பு இருந்த போதிலும் மொத்தத்தில் அவர்களது போராட்டம் முழுக்க முழுக்க சுய போராட்டமாகும். ஒடுக்கப்படும் மக்கள் தாமே தமது உரிமைக்காக, விடுதலைக்காகப் போராட வேண்டும் என்ற வரலாற்று உண்மைக்குக் கைதடி வாழ் ஒடுக்கப்பட்ட மக்கள் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

இறுதியாக நடந்த ஒரு சம்பவமே இப்பிரச்சனையை மேலும் வலுவுள்ளதாக்கியது. சாதியில் கூடியவர்கள் என்று கருதப்பட்டவர்களுக்குள்ளும் குறைந்த சாதியினரும் இருக்கின்றனர். இத்தகைய ஒரு இரண்டாந்தரத்தவர்கள் பக்கத்தில் ஒரு மரணச்சடங்கு நடைபெற்றது. இச்சடங்கில் ஒடுக்கப்பட்ட மக்களில் சிலர் கட்டை குத்தி தறிக்கப் போனார்கள். கட்டை குத்தித் தறிக்கச் சென்ற தங்களுடைய ஆட்களுக்கு மயானத்தில் வைத்து அடித்ததோடு கட்டை குத்திகளுக்கும் மண்ணெய் ஊற்றி நெருப்பு வைத்தார்கள். இதனால் ஆத்திரமடைந்த இரண்டாந்தர உயர்மட்டத்தவரை முதலாம்தர உயர்மட்டம் தூண்டி இரண்டாந்தர உயர்மட்டத்தவர்களுடைய வளவிற்குள் நின்ற ஒடுக்கப்பட்டவர்கள் கள்ளுச்சீவும் பாளைகளை வெட்டி விட்டார்கள். மறுநாள் சீவல் மரங்களுக்கு [காசு கட்டியதால் தற்காலிகமாகச்] சொந்தமான சீவல் தொழிலாளர் சிலர் சென்றபோது கள்ளுப்பாளைகள் வெட்டப்பட்டிருப்பதைக் கண்டு கலங்கினார்கள். இதனால் கவலைக்கும் ஆத்திரத்திற்கும் உள்ளான ஒடுக்கப்பட்டவர்கள் உயர் மட்டத்தவர்களுடைய பயிர்களை அழித்தார்கள் ஆனால் கள்ளுப்பாளைகள் முழுக்க முழுக்க வெட்டப்பட்டபோதிலும் பயிரழிப்பு வீதம் குறைவானது என்பது குறிப்பிடத்தக்கது.

இது இப்படியிருக்க கைதடியில் உள்ள உயர் மட்டத்தவர்களில் ஒருவர் சிங்கள மாது ஒருத்தியைத் திருமணம் செய்துள்ளார். இந்தக் கலப்புத் திருமணம் கைதடி வாழ் ஒடுக்கப்பட்ட மக்களை உயர்மட்டம் நசுக்குவதற்குக் கூடுதலான வாய்ப்பளித்தது. பழிவாங்கத் துடித்த உயர்மட்டம் தங்களுடைய விளைகாய்க் கன்றுகளைத் தாங்களே அழித்துவிட்டு ஒடுக்கப்பட்டவர்கள் மேல் பழியைச் சுமத்தினார்கள் தாங்கள் யார் மீது ஆத்திரம் கொண்டுள்ளார்களோ அவர்களைச் சந்தேக நபர்களாக்கிச் சிங்கள மாதுவின் செல்வாக்கைப் பயன்படுத்தி காவல்துறையினரிடம் முறைப்பாடு செய்தனர்; உண்மைக்கு மாறாக இப்பிரச்சனை திரிக்கப்பட்டதால் காவல்துறை மேலிடம் பொலிசாரை சந்தேக நபர்களைத் தேடுவதற்கு அனுப்பியது. தாக்குதல் வேட்டை நடத்திய பொலிசார் ஒடுக்கப்பட்டவர்களிடம் மிகவும் மிருகத்தனமாக நடந்தார்களாம். காயமடைந்த ஒடுக்

→10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இதயம்

# சமூக சகோதரத்துவம்

சமீபகாலமாக யாழ் குடாநாட்டில் சாதிஒழிப்புக் கோஷங்கள் ஒலிக்கக் கேட்கிறோம். மூன்றும் உலகநாடுக ளோடு ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் ஒன் றிக்க வேண்டிய தமிழ்த்தேசிய இனம் முன்னதாகத் தன் னிடையேயுள்ள உள்ளரங்க முரண்பாடுகளுக்கு முடிவு கட்டியாகத்தான் வேண்டும். நிலப்பிரபுத்துவத்தின் எச்ச சொச்சங்களில் ஒன்றான சாதி அமைப்பை ஒரு முழுச் சமு தாய மாற்றத்தின் மூலமே தகர்க்க முடியும் என்பது 'மனிதன்' இன் நம்பிக்கை. அமைப்புத்தகர்க்கப்படவேண் டியது மட்டும் அல்லாமல் அதன் பின்னும் நிலவக்கூடிய சாதிச் சிந்தனையும் அகற்றப்பட வேண்டியது முக்கியமல் லவா? சமீபகாலமாக நடைபெற்றுவரும் போராட்டங் கள் சில! இச்சிந்தனையை அகற்றும் முயற்சிகள்தான். இந்த வகையில் இது தொடர்பாக இதய சுத்தியுடன் நடாத்தப்பட்டுவரும் எந்தவகைப் போராட்டத்திற்கும் போராளிகளுக்கும் எமது ஆதரவு உண்டு.

ஆயிரத்துத் தொழாயிரத்து அறுபதுகளில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கங்கள் நடாத்திய போராட்டங் கள் தந்த வெற்றிகளை இந்த நேரத்தில் எண்ணிப் பார்ப்ப தோடு அவை நிகழ்த்திய தவறுகளிலிருந்தும் பாடம் கற்க வேண்டும். தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கமானது ஒடுக்கப்பட்ட மக்களையும் ஒதுக்கும் பிரிவைச் சார்ந்த மக்களையும் ஒன்றுக்கொன்று எதிராக இருமுனைப்படுத்தி யது. இதனால் இவ்வியக்கம் வெகுஜன இயக்கமாக இல் லாமல் காந்தியடிகள் மொழியில் சொல்வதானால் ஒரு ஹரிசன இயக்கமாக மட்டும் விளங்கியது. இப்போது இந்த நிலையில் மாற்றம் ஏற்பட்டுவிட்டமையைக் காண் கிறோம். பெரும்பான்மைத் தமிழ்ச்சமுகத்தின் இளஞ் சந் ததிகளிடமிருந்து சாதிக் கொடுமைக்கும், சாதி அமைப் புக்கும் எதிராகப் போர்க்குரல் கிளம்புவதை அவதானிக் கலாம். ஒடுக்கப்பட்ட மக்கள் இந்நேச சக்திகளை இனங் கண்டு அவர்களோடு தம்மை ஐக்கியப்படுத்திக்கொண்டு தமது விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் வெல்ல வேண்டும் சாதி அமைப்பைத் தகர்ப்போம்! சாதிச்சிந் தனையைச் சிதறடிப்போம்!! சமூக சகோதரத்துவமான சமதர்மத் தமிழ்ஈழத்தையே மலர்த்துவோம்!!!



# அறிவுயரச் செய்வோம்

— மாதுரி —

தன்னலத்தால் பணத்துக்காய்ப் பறக்கின்ற தன்மையிலும்
இந்நாட்டில் உழைப்போர்கள் இன்னலுறல் கொடுமை
அன்புக்காய்ப் பிறந்தமனித உறவுகள்; சாதி
அரக்கனின் அடிமைகளாய் இருப்பதுவோர் கொடுமை!

உதவி வேண்டின் சாதிகள் இல்லை !
உணவு எனினும் சாதிகள் இல்லை!
பதவி என்றால் சாதியோ இங்கே?
பணத்தால் மாறும் குணங்கள் அழிக!

தமிழன் நீதிச் சரித்திரம் சொல்லும்;
தலைவர் பேச்சு மேடையில் மட்டும்!
தமிழன் விதியைத் தமிழன் தன்னும்
தியிரை ஒடுக்கும் பணியைத் தொடரீக!

எனக்கு நானே மயிரை வெட்டி - உடை
அழுக்கு நிறைந்தால் நானே கழுவி;
தனக்கு வீட்டில் வேலியும் போட்டு;
தேவை கருதி மரத்தில் ஏறி;

நானே எல்லாச் சாதியும் ஆனேன் - எனின்
நடுவில் ஏது உயர்வும் தாழ்வும்?
தானே தன்னைத் தலையாய் எண்ணும்
தருக்கை ஒழிப்பதும் தமிழன் வேலை!

வாடிய கூலியின் துன்பம் பெருகின்;
விழியினில் விடிவின் பசியைக் காண்பின்!
மூடிய கோவிற் கதவுகள் திறக்கும்!
மூத்தோர், இளையோர் பேதம் மறையும்!

வாழ்வில் அறிவின் துணையை இழக்க;
வறுமையும் சேர்ந்தே சாதியாய்ப் பேசக;
தாழ்வெனச் சொல்வோர் தலைநிமிரச் செய்வோம்!
திறமுள்ள தோழரின் அறிவுயரச் செய்வோம்!

# வெளியார் நோக்கில் மலேத் தமிழர்

[1979 ஜனவரியில் சிறிலங்காவில் நடைபெற்ற ஆசிய மெய்யியலாளர் கூட்டத்தில் பிறநாட்டறிஞர் குழு ஒன்று மலேயகத் தமிழர் பிரச்சனைகளை நேரே அறிந்து சமர்ப்பித்த அறிக்கை]

## விமர்சன நோக்கல்கள்

தோட்டத்தொழிலாளர் தொழிற்சங்கத் தலைவர்கள் போதகர்கள் போன்ருேருடன் நடத்திய உரையாடல்களின் அடிப்படையிலேயே எமது நோக்கல்கள் அமைந்துள்ளன.

### 1: சீரழிந்த நிலை:

இந்திய வம்சாவழியினரான தோட்டத்தொழிலாளர் ஏறக்குறைய 1,000,000 பேர் இலங்கையின் பல தேயிலைத் தோட்டங்களிலும் பரந்து வாழ்கிருர்கள். அண்மையில் இங்கு கொண்டுவரப்பட்ட சில சிங்களவரைத் தவிர ஏனைய அனைவரும் தமிழ் பேசுபவர்கள். இத்தமிழர்கள் 3, 4 தலைமுறைகளாக 200 ஆண்டுகளுக்குக் கூடுதலாக இங்கு வாழ்கிருர்கள். இவ்வாருன நீண்ட காலமாக இருந்த போதும் அவர்களிற் சிலர் இன்னும் நாடற்றவர்களாகவே இருக்கிருர்கள். நாட்டின் பிரஜையின் உரிமைகளை அவர்கள் அனுபவிக்கவில்லை. 1949-இல் இவர்கள் வாக்குரிமை மறுக்கப்பட்டார்கள். அரசியற் கட்சிகள் இவர்களில் அக்கறை காட்டுவதில்லை. இந்திய இலங்கை ஒப்பந்தத்தின்படி 650,000 பேர் இந்தியாவுக்குச் செல்ல வேண்டியிருந்தது. 400,000 பேருக்கு இலங்கை பிரஜாவுரிமை வழங்கப்பட்டது. இதுவரை ஏறத்தாள 150,000 பேர் இந்தியாவுக்குச் சென்று விட்டார்கள். விண்ணப்பம் செய்பவர்களுக்குக் குடியுரிமை வழங்குவதில் இலங்கை அரசு தாமதம் செய்கிறது. 4 பேர் இந்தியாவுக்குச் செல்லும் போது ஒருவர்க்கு மட்டும் குடியுரிமை வழங்கப்படுகிறது. எஞ்சியிருப்பவர்கள் பயத்தில் வாழ்கின்றனர்.

### 2. மனிதனுல் முன்வைக்கப்படும் துரதிஷ்டம்

இத்தொழிலாளர் தமது தொழில் முறைகளை மாற்ற விரும்பினுலும் கூட மாற்றக் கூடிய சூழ்நிலைகள் இல்லை. கொழுந்து பறிப்பவரின் மகள் கடைசி வரை கொழுந்து பறிப்பவளாகவே இருக்கவேண்டியுள்ளது. இந் நிலை தொடர்ந்து நீடிக்குமாயின் இத்தகைய துரதிஷ்டமும் இன்னும் பல தலைமுறைகளுக்குத் தொடரும் இம்மக்கள் பெரும்பாலாஞேர் இந்துக்களாக இருப்பதால் இதனைத் தமக்குக் கடவுளால் விதிக்கப்பட்ட விதி என்று கருதுகின்றனர். ஆனுல் எமது நோக்கில் இது மனிதரால் அவர்கள் மேல் சுமத்தப்படும் துரதிஷ்டம் என்றே கூறலாம்.

### 3. மனித முறைக்குக் கீழ்ப்பட்ட வாழ்க்கை முறைகள்:

இவர்களின் வாழ்க்கை நிலைகள் மிகவும் கீழ்த்தர நிலையிலே உள்ளன. இவ்வளவு கால கடின உழைப்பின் பின்பும் இவர்கள் வதிவிடங்கள், மலகூடங்கள் போன்ற வசதிகளைத் தானும் அனுபவிப்பதில்லை. நாம் வசித்த ஒரு கிராமத்தில் ஒரு சிற்ருறு இயற்கையான நீர்ப்போக்குடைய மலசல கூடமாகவும் பல் மினுக்கி முகங் கழுவும் இடமாகவும் பயன்பட்டது. பெரும்பாலான வீடுகளில் இரண்டு அறைகளே இருந்தன, முன் அறை சமயலறையாகவும் மற்ற அறை எவ்வித சுகாதார வசதிகளுமின்றி வசிக்கும் அறையாகவும் பயன்படுத்தப்பட்டது பெரும்பாலானவர்கள் பாய்கூட இல்லாமல் நிலத்திலேயே படுக்கின்றனர். அவர்களிடம் வெப்பத்தைக் கொடுக்கக் கூடிய உடைகள் எதுவுமில்லை. நாம் கண்ட சிறுவரிற் பலர் சளிசுரத்தால் பீடிக்கப்பட்டுள்ளனர். பிறப்பு விகிதம் மிக உயர்வாகவுள்ளது. குழந்தை மரண வீதம் 9·4% ஆகக் காணப்படுகிறது.

### 4, திருப்தியற்ற வைத்திய வசதிகள்

தோட்டங்களிலுள்ள வைத்தியசாலைகள் தொழிலாளரின் சில சாதாரண வருத்தங்களைக் கவனிக்கின்றன எனினும் கடுமையான வருத்தங்களுக்கு நகர ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டியிருப்பதுடன் அங்கு கூடிய கட்டணங்களையும் செலுத்த வேண்டியுள்ளது. எவ்வித வைத்திய விடுமுறையும் அளிக்கப்படுவதில்லை. நோயாளி ஒருவன் தனது வேலையையும் சம்பளத்தையும் இழக்க வேண்டியுள்ளது. தொழிலாளரின் குழந்தைகளுக்கென உள்ள ஒரு சில பராமரிப்பு நிலையங்கள் திருப்திகரமற்ற முறையில் இயங்கி வருகின்றன; 1 பெண் 30—40 குழந்தைகளைப் பராமரிக்க வேண்டியுள்ளது.

### 5. கல்வி வசதிக்குறைவு:

80% மான தொழிலாளர் படிப்பறிவு இல்லாதவர்கள் 20½% மானேர் மட்டும் 5-ம் தரக் கல்வியுடையவர்கள்; ஒரு சிலர் 8 ம் வகுப்புவரை வகுப்புகளுக்குச் சென்றுள்ளார்கள். உயர்கல்வித் தகுதிபெற்று பல்கலைக்கழக அனுமதி பெறக்கூடிய எவரையும் காணமுடியவில்லை. கல்வியில் ஏன் ஆர்வம் காட்டவில்லை எனக்கேட்டபோது இந்திய வம்சாவழியினராகிய தோட்டத்தொழிலாளரின் பிள்ளைகள் என்பதால் அரசு தமக்கு வேலை வழங்கப்போவதில்லை. எனவே உயர்கல்வியால் பயனில்லை என்று கூறினுர்கள்.

### 6, லாபத்துக்கேற்ப சம்பளம் அமைக்கப்படாமை:

40 50 வருடங்களாக ஒருவன் தோட்டத்தில் வேலை செய்தபோதும் அவன் உறுதிப்படுத்தப்படாதவனுக, தொழில் பாதுகாப்பு அற்றவனுக வாழ்கிருன், ஆகக் கூடியது; ஒரு பெண் மாதத்தில் 30 நாளும் ஒரு ஆண் 21 நாளும் ஊழியம் செய்கிருன். நாள் ஒன்றுக்கு ஆணுக்கு ரூபா 10-50 பெண்ணுக்கு ரு. 7-50 வழங்கப்படுகிறது. ஒரு

→ 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வவுனியா முல்லைத்தீவு மாவட்டங்களில்

1:1 புவியியல் நிலை

மாவட்டங்களின் பரப்பளவு - 1466 சதுரமைல்கள்
930720 ஏக்கர்கள்

1971 குடிசன மதிப்பின்படி சனத்தொகை விபரம்

| | |
|---|---|
| தமிழர் | 73,010 |
| சிங்களர் | 15 541 |
| முஸ்லீம்கள், | 6,665 |
| பறங்கியர் | 117 |
| மலாயர் | 35 |
| ஏனையோர் | 165 |
| மொத்தம் | 95,533 |

1-2 பொது நிலைமைகள்: இவ்விரு மாவட்டங்களும் அபிவிருத்தி குறைந்த பகுதிகள் என்ற பகுப்புக்குள் வருகின்றன, போதுமான அளவு போக்குவரத்து கொண்டு செல்லல் வசதிகள் இப்பகுதிகளில் இல்லை. கிராமங்கள் ஒன்றிலிருந்து ஒன்று தூரத்தில் அமைந்தவையாக இடையே காட்டுப்பகுதிகளால் பிரிக்கப்பட்டவையாக உள்ளன. இதனால் கிராமங்களிடையேயுள்ள தொடர்பு குறைவானதாகவுள்ளது. வைத்திய வசதிகள் போதியளவு இம்மாவட்டங்களில் இல்லை. சிறிது கடுமையான நோயாளிகள் இங்கிருந்து அனுராதபுர வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்படவேண்டியுள்ளது. வவுனியா மாவட்டத்தில் 90% மேற்பட்டோர் விவசாயத்தில் ஈடுபட்டவர்களாக உள்ளனர். இவர்களில் பெரும்பான்மையோர் வறியவர்களாக உள்ளனர். மீன்பிடி முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளில் நடைபெறுகிறது, ஆனால் மன்னார், காலி, யாழ்ப்பாணம் முதலிய மாவட்டங்களைப்போல் இங்கு மீன்பிடி வளர்ச்சியடைந்த நிலையில் இல்லை. வவுனியா மாவட்டத்தின் தலைநகரான வவுனியாப்பட்டினம் ஒரு சிறிய பட்டினமாக விளங்குகிறது. முல்லைத்தீவு மாவட்டத்தின் தலைநகரான முல்லைதீவு இதிலும் சிறிய பட்டினமாக விளங்குகிறது. இவை பட்டினசபை அந்தஸ்தையே கொண்டனவாக விளங்குகின்றன. முன்பு வவுனியாவும் முல்லைத்தீவும் ஒரே தேர்தல் தொகுதியாகவும், ஒரே மாவட்டமாகவும் விளங்கின. கடந்த தொகுதி நிர்ணயத்தின்போது இவை இரண்டு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டன. சென்ற ஆண்டு இவை இரு வேறு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டன. இம்மாவட்டங்களை அடுத்து சிங்களப்பகுதிகள் அமைந்திருப்பதாலும் வவுனியாமாவட்டத்தில் பெருமளவு சிங்களக் குடியேற்றங்கள் இருப்பதாலும் இபபகுப்புக்கள் தமிழர் நிலையை இம்மாவட்டங்களில் மேலும் பலவீனமடையச் செய்துள்ளன.

2. இளையோர் பிரச்சனை:— இங்குள்ள இளையோரின் பிரச்சனைகள் ஏனைய மாவட்டங்களிலுள்ள இளையோரின் பிரச்சனைகள்போல் நடைமுறையிலுள்ள சமூக பொருளாதார முறைகளின் விளைவுகளாக உள்ளதுடன் இம்மாவட்டங்களின் அபிவிருத்தி குறைந்த தன்மை இப்பிரச்சனைகளை மேலும் சிக்கலானவையாக ஆக்குகின்றன.

2.1 கல்விப் பிரச்சனைகள்: இம்மாவட்டங்களில் மொத்தம் 13 மகாவித்தியாலங்கள் அமைந்துள்ளன. ஆனால் இவற்றில் உயர்தரவகுப்புகளில் படிப்பிக்க விசேடமாக விஞ்ஞான பாடங்கள் படிப்பிக்கத் தகுதியான ஆசிரியர்கள் போதிய அளவில் இல்லை. வசதி படைத்தவர்கள் பலர் தமது பிள்ளைகளை பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சைக்கு முன்னதாக யாழ்ப்பாணப் பகுதிக்கு அனுப்பி தனியார் கல்வி நிலையங்கள் மூலம் அவர்களைப் பரீட்சைக்குத் தயார் செய்து பின்பு வவுனியாவிலுள்ள அவர்களது கல்லூரிகளினூடாக பரீட்சை எழுதச் செய்கிறார்கள். வவுனியாவில் உள்ள வசதி குறைந்தோரின் பிள்ளைகள் இப்படிச் செய்ய முடியாத நிலையில் உள்ளார்கள். இதனால் வசதி உள்ளவர்களின் பிள்ளைகள் பின் தங்கிய பிரதேசம் என்ற அடிப்படையில் வவுனியாய் பகுதிக்குக் கொடுக்கப்படும் சலுகையைத் தட்டிச்செல்லக்கூடியதாகவிருக்கிறது அதே வேளையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவர்கள் சிலர் யாழ்ப்பாணத்தில் படித்துவிட்டுப் பரீட்சைக்கு இப்பகுதியிலுள்ள கல்லூரிகள் மூலம் தோற்றுவதன்மூலம் வவுனியா முல்லைத்தீவுப்பகுதி மாணவர்களுக்கென அளிக்கப்படும் சலுகைகளைத் தட்டிக்கொண்டு போகும் சம்பவங்களும் இடம்பெறுவதுண்டு. யாழ்ப்பாணத்து மாணவர்கள் இங்குள்ள தமது உறவினர்களுடனும் இங்கு வேலை செய்யும் யாழ்ப்பாணத்து உறவினர்களுடனும் தங்கியிருந்து இவ்விதம் செய்யக்கூடியதாகவுள்ளது: இது யாழ்ப்பாணத்திலுள்ள வசதிபடைத்தோரின் தந்திரோபாயமாக விளங்குகிறது: மேற் குறிப்பிட்டவை வசதிகுறைந்த வவுனியா மாணவரிடையேயும் மற்றும் வவுனியாமாணவரிடையேயும் ஒரு விரக்தி மனப்பான்மையை ஏற்படுத்தக் காரணமாக அமைந்துள்ளது.

இம்மாவட்டங்களிலுள்ள மகாவித்தியாலயங்களில் போதிய ஆய்வுகூட வசதிகளில்லை. தராதரமும் நல்ல தகுதியுமுடைய ஆசிரியர்கள் தம் வசதிகள் கருதி இப்பகுதிகளில் சேவையாற்ற பின்நிற்கிறார்கள். அப்படியானவர்கள் இப்பகுதிகளுக்கு மாற்றப்படுமிடத்தும் அரசியல் மற்றும் செல்வாக்குகளைப் பாவித்தும் தமது பகுதிகளிலேயே ஒட்டிக்கொண்டும் இருந்து கொள்ளுகிறார்கள். இம்மாவட்டங்களிலுள்ள வசதி படைத்தவர்கள் வசதி குறைந்தவர்களிலும் பார்க்க கல்வி அறிவு உடையவர்களாயிருக்கிறார்கள். ஆனால் இவர்கள் தமது பிள்ளைகளை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி பரீட்சைக்கு அவர்களைத் தயார் செய்விக்கக்கூடிய நிலையில் உள்ளதாலும் வேறு துறைகளுக்கு (கணக்காளர், சட்டத்தரணி) போக வசதியுள்ளதாலும் வெளிநாடுகளுக்குப் பிள்ளைகளை அனுப்ப வசதியுள்ளதாலும் இவர்கள் இம்மாவட்டங்களிலுள்ள கல்வி வசதிகளை வளர்ப்பதில் போதிய ஊக்கம் காட்டுவதாக இல்லை. சிலருக்கு யாழ்ப்பாணம் கொழும்புப் பகுதிகளிற்குப் பிள்ளைகளை அனுப்பிப் படிப்பிப்பது இன்னும் அந்தஸ்துக் குறியீடாக (Status symbol) விளங்குகிறது.

இம்மாவட்டங்களிலுள்ள இளம் யுவதிகளைப்பொறுத்த வரையில் இப்பிரச்சனை மேலும் சிக்கலாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இளையோர் பிரச்சனை

யாழ்ப்பாணப் பகுதியிலிருந்து போயிருந்து தங்கி பரீட்சைக்கு ஆயத்தம் செய்வதிலுள்ள சிக்கல்களை எதிர்நோக்கி இவர்களில் பலர் தம் படிப்பை இடை நிறுத்தவேண்டியுள்ளது. இப்பகுதியிலுள்ள பெற்றோரில்பலர் போதிய கல்வி அறிவு உள்ளவர்களாக இல்லாமையால் தமது பிள்ளைகளுக்குக் கல்வி அளிப்பதில் இவர்கள் போதிய கவனம் காட்டத் தவறுகிறார்கள்; அவர்களது பொருளாதாரக் கஷ்டங்களும் இதற்கு முக்கியகாரணமாகிறது.

க. பொ. த. ப. (சாதாரணம்) க. பொ. த. ப. (உயர் தரம்) சித்தியடைந்த மாணவர்களில் பலர் பலவிதமான ஒதுக்கல்கள் காரணமாக விடிவற்ற நிலையில் உள்ளதும் தமது பிள்ளைகளுக்கு உயர்கல்வி அளிப்பதற்கு பெற்றோருக்கு உந்துதலளிக்கக் கூடியதாகவில்லை.

2.2 <u>வேலையில்லாப் பிரச்சனை:</u> இப்பகுதிகள் போதிய அளவு அபிவிருத்தியடையாத பகுதிகளாதலால் இளையோருக்கு இப்பகுதிகளில் வேலை வசதிகள் குறைவாக உள்ளது, இங்கு அரசாங்கத்தினதோ அல்லது தனியாரது தொழிற்சாலைகளோ இல்லை. நெசவுசாலைகளோ அல்லது சிறுதொழில் திட்டங்களோ எதுவும் இல்லை. பெரிய வர்த்தக ஸ்தாபனங்களும் இங்கு இல்லை; விவசாயத்தைப் பொறுத்த வரையும் நீர்ப்பாய்ச்சல் வசதிகள் மற்றும் இதரவசதிகள் இப்பகுதிகளுக்குப் போதிய அளவு செய்துகொடுக்கப்படாமையால் ஆண்டில் ஒரு காலப் பகுதியிலேயே விவசாயம் செய்யக்கூடியதாகவுள்ளது. உப - உணவுப் பொருட்கள் தொடர்பாக அரசாங்கம் கையாளும் கொள்கை இவற்றின் உற்பத்தியைக் குறைத்து வேலை வாய்ப்புக்களை மேலும் குறைத்துள்ளது;

நிலத்தைப் பொறுத்தவரையில் பல இளைஞர்கள் விவசாயத்திற்கு வேண்டிய நிலத்தைப் பெறமுடியாத நிலையில் உள்ளனர். மூடிக்குரிய நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் பெரும்பாலும் வசதிபடைத்தோரே இந்நிலங்களைத் தமது கையாட்கள் மூலம் பெருமளவில் பெறக்கூடியதாகவிருந்தது. ஒரு சிலரைவிட உண்மையாக வழியற்றவர்கள் பலர் இந்நிலங்களைப் பெறமுடியாது இருக்கும் சந்தர்ப்பங்களில் சொத்துள்ளவர்களே இவற்றை மேலும் பெறக்கூடியதாக இருந்துள்ளது. விவசாயத் திட்டங்களின் மூலம் சென்ற அரசாங்கத்தின் காலத்தில் நிலமும் வசதிகளும் வழங்கப்பட்டபோது குறிப்பிடக் கூடிய அளவு வசதிபடைத்தவர்களின் பிள்ளைகளே இவற்றைப் பெறக்கூடியதாகவிருந்தது; இவ்விளைஞர்களுக்கு வேறு வசதிகள் இருந்தமையால் அவர்கள் கஷ்டப்பட்டு வேலை செய்யப் பின் வாங்கியமையும் விவசாயத்தில் உண்மையாக ஆர்வமில்லாமலிருந்தமையும் சென்ற அரசாங்க காலத்தில் இப்பகுதியில் தொடங்கப்பட்ட 23 மாவட்ட அபிவிருத்திச்சபை அபிவிருத்தித் திட்டங்கள் தோல்வியடைந்தமைக்கு முக்கிய காரணங்களாகும்; காணிகளைப் பெற்ற வசதிபடைத்தவர்களிற் பலர் ஒரு மலையகத் தமிழ்க் குடும்பங்களை அங்கு வைத்திருந்து அவர்களைக் கடும் வேலை வாங்கி அவர்களது உழைப்பைச் சுரண்டி கூடிய லாபம் எடுக்க முயற்சிக்கிறார்கள். அபிவிருத்தித்திட்டங்களல்லாத மற்றப் பகுதிகளுக்கு வசதி குறைந்த இளைஞருக்கு நிலம் கிடைக்கும் சந்தர்ப்பத்தில் அவற்றைத் திருத்துவதற்கும் பயிர் செய்வதற்கும் அவர்களுக்குப் போதிய ஆதரவு கிடைப்பதில்லை. நிதி உதவி பெறுவதும் செல்வாக்கின் அடிப்படையில்தான் தங்கியுள்ளது. தற்போதைய அரசாங்கத்தின் கொள்கை அபிவிருத்தித் திட்டங்களை ஏற்படுத்துவதற்கு எதிராகவுள்ளது. தமிழ் இளைஞர் இளம் யுவதிகள் வேலையில்லாப் பிரச்சனையால் இன்றும் கூடுதலாகப் பாதிக்கப்படுகிறார்கள்; சீதனப் பிரச்சனையால் மணம் முடிக்க முடியாத நிலையில் பலர் உள்ளார்கள். இவர்கள் தம் வாழ்க்கைக்கு வயது வந்த பின்னும் பெற்றோரிலேயே தங்கியிருக்கவேண்டியுள்ளது; பெற்றோர்கள் இவர்களைத் தமக்குப் பாரமாகக் கருதும் நிலை கூட பல சந்தர்ப்பங்களில் காணமுடிகிறது.

2.3 இளையோர் அமைப்புக்கள்: (Youth organizations:- கல்வி, போக்குவரத்து பொருளாதார வசதிகள் போதுமானதாகவில்லாமையால் இளையோர் அமைப்புக்கள் இப்பகுதியில் குறைவாகவே உள்ளன. இங்கொன்று அங்கொன்றாக ஒரு சில விளையாட்டுக் கழகங்கள் கலைவட்டங்கள் என்பனவே உள்ளன. இந்து இளைஞர் மன்றம் ஒன்று வவுனியாவில் உள்ளது. ஆயினும் இதுவும் கழக முன்னேற்றம் என்ற வகையில் பெரும் பணியாற்றுவதாகக் கூறமுடியாது. பல இளைஞர்கள் தமிழ் இளைஞர்பேரவை என்ற அமைப்பில் அங்கத்தவர்களாக இருக்கிறார்கள்; மாறி மாறி வந்த அரசாங்கங்களால் தமிழ் மக்கள் ஒதுக்கப்பட்டமை தமிழ் ஈழம் ஒன்றே தமிழ் மக்களின் விடுதலைக்கு வழி என அவர்களை உணரப்பண்ணியமை அவர்கள் இவ்வமைப்பில் சேருவதற்கு காரணமாக இருந்துள்ளது. இவர்களில் பலர் தமிழ்ஈழம் சோசலிஷ அடிப்படையிலேயே அமையவேண்டும் என்ற கொள்கை உடையவர்களாயிருந்தாலும் சோசலிஷம் பற்றிய போதிய கருத்து விளக்கத்தை மேலும் இவர்களில் பலர் பெறவேண்டியுள்ளது. யுவதியர் அமைப்புக்களைப் பொறுத்தவரையில் அவை பெரும்பாலும் இல்லையென்றே கூறலாம்.

<u>முடிவுரை:</u> இப்பகுதி இளையோரிடம் சமூகம் பற்றிய விளக்கம் குறைவானதாகக் காணப்படுகிறது; இதற்கு இங்கு கல்விநிலை போதிய அளவிற்கு வளராதது ஒரு காரணமாக உள்ளது. போக்குவரத்து வசதியின்மை காரணமாக இளைஞர்கள் ஒன்று சேர்வது குறைவாக உள்ளமை இளைஞர்கள் குடும்ப விவசாய வேலைகளுடன் சமூக வேலைகளை மேற்கொள்ள அவகாசமற்று இருக்கின்றமை ஆகியனவும் இதற்குக் காரணங்களாக உள்ளன; வசதிபடைத்தவர்கள் சமூக முன்னேற்றத்தில் வேண்டிய அக்கறை உள்ளவர்களாக இல்லை. தமது குடும்ப நலன்

→ 9

# சாதிப் பாகுபாடு எப்படி வந்தது?

— பேராசிரியர்: கா. இந்திரபாலா —

[15-6-79] யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் சாதி ஒழிப்புப் பற்றி நடைபெற்ற கருத்தரங்கில் வழங்கப்பட்ட கருத்துக்கள் ]

இந்தியாவும் இலங்கையும் அடங்கியுள்ள தென்னாசியாவிலே வேறிடங்களிலே காணமுடியாதவகையில் ஒரு சமூகப்பாகுபாட்டு முறை வளர்ந்து காணப்படுகின்றது: இத்தகைய பாகுபாட்டுமுறை இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இருக்கவில்லை. கடந்த மூவாயிரம் ஆண்டு ,காலத்திலேதான் படிப்படியாக இதன் வளர்ச்சி ஏற்பட்டு வந்துள்ளது:

ஆதிச் சமுதாயத்தில் மனிதன் மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்ந்தாலும் ஏற்றத் தாழ்வுகள் பாராட்டாது சமத்துவத்துடன் வாழ்ந்தான். தனிச் சொத்துக்களைத் தேடாது எல்லாவற்றையும் எல்லோரும் பகிர்ந்து உண்ணக்கூடிய நிலை அப்பொழுது இருந்தது. அதுமட்டுமல்லாது எல்லோருமே வேலை புரிந்து வாழ்ந்தனர், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வேலை இருந்தது. எவருமே ஓய்வுடன் வேலை புரியாது, பிறர் உழைப்பின் பலாபலன்களை அனுபவிக்க முடியாதிருந்தது. சிறு பிள்ளைகளும், பெண்களும் ஆண்களும் தத்தமக்கென வேறு வேறு பணிகளைப் புரிந்து கூடி வாழ்ந்தனர்.

ஆனால் இந்த நிலை மாறி, என்று மனிதன் பிறர் உழைப்பைக்கொண்டு தன் வாழ்க்கையைச் சொகுசானதாக அமைக்கத் தொடங்கினானோ அன்றே ஏற்றத் தாழ்வுகளும் பாகுபாடுகளும் உருவாகத் தொடங்கின. மனிதன் மனிதனை அடிமையாக்கினான், அடிமை மூலம் தன் வேலைகளைச் செய்வித்தான். காலப்போக்கில் வெவ்வேறு வேலைகளை வெவ்வேறு மனிதர்க்குப் பிரித்துக்கொடுத்தான். அவ்வேலைகள் பரம்பரை பரம்பரையாகச் செய்யப்படத் தொடங்கியதும் சாதிமுறையும் உருவாகியது: அவரவர் தொழிலுக்கேற்ப அவரவர் அந்தஸ்தும் நிர்ணயிக்கப்பட்டது: இது மாற்றமுடியாத வகையில் பல நூற்றாண்டுகளாக இறுக்கமடைந்துள்ளது,

தென்னாசியாவின் சாதிப்பாகுபாட்டு முறையின் வளர்ச்சியை ஆரியர் வருகையின் பின்னரே அவதானிக்க முடிகின்றது. இற்றைக்கு 3500 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரியர் இந்தியாவுக்குள் நுழைந்தனர். அப்போது இந்தியாவிலே திராவிடரும் பிற இனத்தவர்களும் வாழ்ந்து கொண்டிருந்தனர். அந்த அனாரியர்கள் ஆரியர்களிலிருந்து நிறத்தாலும் பண்பாட்டாலும் வேறுபட்டிருந்தனர். இவர்களை அடிமைப்படுத்திய ஆரியர் தாஸ, தஸ்யு என்ற பெயர்களை அடிமை என்னும் பொருள்பட இவர்களுக்கு இட்டனர், இரு சாராரையும் வெளித்தோற்றத்தில் இலகுவில் வேறுபடுத்த உதவிய பண்பு நிறமாகும், ஆகவே நிறத்தின் அடிப்படையில் மேலைத் தேசத்திற்போல ஒரு பாகுபாடு உருவாகியது. வடமொழியில் நிறத்துக்குரிய சொல் 'வர்ண' என்பதாகும். நிறத்தின் அடிப்படையிலான பாடுபாடு வர்ணப் பாகுபாடு ஆயிற்று. முதலில் இரண்டு வர்ணங்கள்தான் இருந்தன, ஒன்று ஆரிய வர்ணம், மற்றது தஸ்யுவர்ணம் ஒன்று ஆரியர் அனைவரையும் உள்ளடக்கிய உயர்வர்ண்ணம். மற்றது அடிமைப்பட்ட அனாரியர்கள் அனைவரையும் உள்ளடக்கிய தாழ்ந்த வர்ணம். இது எதிர்பார்க்கக்கூடிய ஒன்றே:

காலப்போக்கில் அனாரியர் நன்கு அடக்கப்பட்டு, ஆரியர் நிரந்தரமாக இந்தியாவில் குடியேறி வாழத் தொடங்கியதும் இரு சாராருக்கும் இடையிலிருந்த முரண்பாடு குறையத் தொடங்கியது. அதற்குப் பதிலாக ஆரியருக்குள்ளேயே முரண்பாடுகள் தோன்றின. அனாரியருடன் போராடிய காலத்தில் ஆரிய மக்களுக்குப் பாதுகாப்பளித்த போர்வீரர்களே சமூகத்தில் பிரதான இடத்தை வகித்தனர், அவர்களே தலைவர்கள். அவர்களே பின்னர் குடியேற்றங்களின் ஆட்சியாளர் அவர்களே மெதுவாக மன்னர்களாக மாறியவர்கள். அவ்வாறு ஒரு சிறப்புப் பணி புரிந்தோர் ராஜன்யர் எனப்பட்டனர். இவர்கள் பின்னர் சத்திரியர் எனப்பட்டவர்கள். பாதுகாப்பளிப்பது முக்கியமானதாகக் கருதப்பட்ட ஆரம்ப கட்டடத்தில் இவர்கள் தான் பிரதானமான முதன்மையான வகுப்பினர். கல்வியறிவுபெற்றுச் சமயக்கிரியைகளில் ஈடுபட்ட பிராமண வர்க்கத்தினர் இரண்டாது இடத்தைப் பிடித்துக் கொண்டனர். வர்த்தகத்திலும் பிறதொழில்களிலும் ஈடுபட்டோர் வைசியராகினர். அடிமைகளாய் நிலத்தோடு சம்பந்தப்பட்ட தொழில்களையே பெருமளவுக்குப் புரிந்த அனாரியர்கள் சூத்திரர் ஆகினர். நான்கு வர்ணப்பாகுபாடு இவ்வாறு தோன்றியது.

## பிராமணர் எழுச்சி

அனாரியர் அடக்கப்பட்டபின் ஆரியரும் நிரந்தரமான குடியேற்றங்களை அமைத்து அமைதியான வாழ்க்கையில் ஈடுபடத்தொடங்டயபோது பாதுகாப்பு நடவடிக்கைகள் போர்த்தொழில்கள் ஆகியவை முன்பு பெற்றிருந்த முக்கியத்துவத்தை இழந்தன. இதனால் ராஜன்ய அல்லது சத்திரிய வர்க்கம் தனது முக்கியத்துவத்தை முன்போல அனுபவிக்க முடியவில்லை. அறிவுத்துறையில் ஆதிக்கமும் சமயத்துறையிலே முக்கியத்துவமும் பெற்ற பிராமணர் இந்நிலையில் உயர்வு பெறத் தொடங்கினர். ஆட்சியாளருக்கு அறிவுரை,வழங்கும் நிலையில் அவர்களே இருந்தனர், சமயக்கிரியைகளைப் புரியக் கூடியோராயும் அவர்களே சிறப்புப் பெற்றனர். கோன்மைஎன்றகோட்பாடு வளரத்தொடங்க மன்னனானவன் தெய்வீகத் தன்மையுடையவன் எனவும்

→ 11

## வெளியார் நோக்கில் மலைத் தமிழர் . .

சாதாரண குடும்பத்தில் 6 அங்கத்தவர் உள்ளபோது கணவனும் மனைவியும் தொழில் செய்யுமிடத்தில் மாத வருமானமாகக் கிடைக்கும். 450/- குடும்பத்தின் அடிப்படைத் தேவைகளைக் கவனிக்கவே போதாமலிருக்கிறது: கொடுக்கப்படும் சம்பளம் நிர்வாகத்தினரின் லாபத்துடன் விகிதசமமாக அமைவதில்லை. மலைமேலுள்ள நிர்வாகியின் வீடும் பள்ளத்தாக்கிலுள்ள தொழிலாளர் வீடும் பொருளாதார வேறுபாடுகளைக் காட்டும் குறியீடுகளாக உள்ளன.

7. மூலதனமிடப்பட்ட தொழிற்சங்கங்கள்:

அரசு ஒரு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடப்பதாகத் தொழிலாளர் உணர்கின்றனர். அரசு இதுவரை மேற்கொண்டு வந்த திட்டங்கள் யாவும் இந்திய தமிழ் தொழிலாளரின் ஒவ்வொரு சிறு உரிமையையும் பறிப்பதாகவே உள்ளன. காணித்திருத்தச் சட்டத்தின் கீழ் இவர்களது காணிகளைப்பறித்து சிங்களவருக்குக் கொடுக்க முயன்றது. இணைப்புத் திட்டத்தின் கீழ் மேலும் பல சிங்களவர்களைக் கொண்டுவந்து இவர்களின் வேலை வாய்ப்புக்களை அழித்து விடுகிறது முன்பு ஒரு தொழிலாழியின் மகனுக்கு 14 வயது வந்தவுடன் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படுவான். இந்நிலைமை இனிமேல் இல்லை. அவன் வேலையற்றவனாக இருந்து நிர்வாகத்திடம் கையேந்த வேண்டியவன் ஆகிறான்.

8. தாயகம் திரும்புதல் புனர்வாழ்வு சம்பந்தமான பிரச்சனைகள்.

இந்தியா செல்ல விரும்பும் தொழிலாளருக்கு எவ்வித ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படவில்லை. தமது சேமிப்பு முழுவதையும் எடுத்துச் செல்ல அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. ஒரு குடும்பம் 4000/- (இந்: பெறுமதி 2000/-) மட்டுமே எடுத்துச் செல்ல முடியும்; இது இந்தியாவில் ஒரு வாழ்க்கை தொடங்கப்போதாது இவர்கள் மனிதாபிமானமற்ற முறையில் வள்ளங்களில் ஏற்றப்பட்டு இந்தியக் கரையில் இறக்கப்படுகிறார்கள்; இந்திய அரசாங்கம் கூட இவர்கள் மட்டில் போதிய கவனம் செலுத்தவில்லை; இந்திய கடவைச் சீட்டுகள் வைத்திருப்பவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்குக் கூட இந்திய அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

9. பாதுகாப்பற்ற நிலை:

77 இன் கலவரத்தின் பின் இவர்கள் தமது உயிருக்குப் பாதுகாப்பு இல்லாத முறையில் பயத்துடனே வாழ்கின்றனர். மேலும் பல நோக்கல்கள் இருந்தும் இடநெருக்கடி காரணமாக இத்துடன் நிறுத்துகிறோம்.

குறிப்புகள்:-

1. இந்திய வம்சாவழித் தொழிலாளர் மட்டில் அரசு காட்டும் மனப்பான்மையில் சமூக வேறுபாடுகள் காணப்படுகின்றன.

சில கிறிஸ்தவ நிலையங்கள் சிங்களவர். தமிழரை சமாதானமாக வாழ்ந்து உழைக்க வைக்க முயற்சிக்கின்றன. இரு பிரிவினராலும் சம உரிமைகள் அனுபவிக்கப்படாத இடத்தில் இந்நிலை சாத்தியமாகாது. எனவே அரசாங்கம் இதனை உடனடியாக நிவிர்த்தி செய்ய வேண்டும்.

2. தோட்டத் தொழிலாளர் பற்றிய செய்திகள் வெளியுலகில் இருட்டடிப்பு செய்யப்படுகின்றன: அடிப்படை மனித உரிமைகள் கூட இவர்களுக்கு மறுக்கப்படுகின்றன: சர்வதேசக் கருத்துக்களை நாம் ஒருமுகப்படுத்தி இவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளையும், சுரண்டல்களையும் வெளியுலகுக்குக் காட்டினால் அரசு தீவிர நடவடிக்கைகளில் இறங்க இடமுண்டு! ★

## வவுனியா முல்லைத்தீவு மாவட்டங்களில் . .

களிலேயே முழுதும் அக்கறை உள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆனால் இவர்களில் பலர் சமூக முன்னேற்றத்திற்காக உழைப்பதாகக் காட்டிக்கொண்டு இப்பகுதிக்கு வழங்கப்படும் சில சலுகைகளிலிருந்து கூடிய பயனைத் தாமடைய முயற்சிக்கிறார்கள்.

இளையோரது உடனடிப் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண முதலில் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ஆசிரியர்கள் இப்பகுதிகளில் வந்து சேவையாற்றி இப்பகுதிகளின் கல்வி நிலையை உயர்த்த முன்வர வேண்டும். சமூகம் பற்றிய சரியான விளக்கத்தை இளையோர் பெற கருத்தரங்குகள் பிரசுரங்கள் முதலியவற்றின்மூலம் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இவர்களது பிரச்சனைகளுக்குப் பெருமளவு தீர்வு ஒரு சோசலிஸ தமிழீழத்தை அமைப்பதின் மூலமே காணமுடியும். எனவே இதனை ஏற்படுத்த இப்பகுதி இளையோரும் மற்றும் மக்களும் மற்றைய பகுதித் தமிழ் மக்களுடன் ஒன்றுசேர்த்து செயலாற்ற வேண்டும். ★

✱ இடிக்கும் அரிசியில் ஒட்டாத தீட்டு — அவர்
குடிக்கும் கிண்ணத்தில் ஒட்டிடுமோ

✱ வெளுக்கும் துணிகள் அணிந்து வருவோம்
ஏனோ மனங்கள் வெளுப்பதில்லை.

★ வீடுகட்டும் மேசனுக்கு வீட்டினிலே இடமில்லை.
கிணறு வெட்டும் தொழிலாளிக்குக் கிணற்றினிலே
தண்ணீரில்லை
கோவிலிலே பூசையென்றால் கோடியிலே
காக்கவைப்பீர்
ஏனையா இவ்வநீதி? ஒழித்திடுவீர் தீண்டாமை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கப்பட்டவர்களில் இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது ஆனால் சில ஒடுக்கப்பட்ட தலைவர்கள் ஏ எஸ் பி. அவர்களிடம் சென்று நிலைமையை விளக்கி ஒடுக்கப்பட்டவர்கள் மேல் சுமத்தப்பட்ட பொய்க் குற்றச்சாட்டை அம்பலப்படுத்தினர். இதில் குறிப்பிட வேண்டியது என்னவென்றால் ஒடுக்கப்பட்டவர்கள் செய்யாத குற்றத்தைச் செய்ததாக உயர் மட்டத்தினர் காவல்துறையினரிடம் முறைப்பாடு செய்து ஒடுக்கப்பட்டவர்கள் அக்குற்றத்தை [பயிர் அழிப்பை]ச் செய்யும்படி நிர்ப்பந்தப் படுத்தியதுதான். நிலைமையை அறிந்துகொண்ட ஏ எஸ். பி, காவல்துறையினரைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தார். சந்தேக நபர்களை பொலிசில் ஆஜராகுமாறும் கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

ஒடுக்கப்பட்டவர்களுக்காக உழைத்த திரு. ச. இராமலிங்கம் என்பவருக்கு ஏற்பட்ட நிலைமைபற்றியும் குறிப்பிட்டாக வேண்டும். இவர் ஓர் இளைப்பாறிய அரச சேவையாளர். "உயர்சாதி" ப் பிரிவைச் சார்ந்தவர். கைதடியில் உயர்மட்டத்தினர் பகுதியில் குந்தகைக் காணி ஒன்றில் குடிசை அமைத்துத் தனது தாயாருடன் வாழ்ந்து வந்தவர் கைதடி வாழ் நசுக்கப்பட்ட மக்களுக்காக இவர் உழைத்து வந்துள்ளார். தேர்ப்பிரச்சனை தொடர்பாக சகல அமைச்சர்களுக்கும் முறையீடு ஒன்றை அனுப்பி இருந்தார். அங்குள்ள உப அஞ்சல் அகத்தில் வழங்கப்பட்ட நியமனங்களில் ஒடுக்கப்பட்டவர்களுக்கு உரிய இடம் கிடைக்காததையும் உயர் மட்டத்தினரின் ஊழல்களையும் அம்பலப்படுத்திச் சில நடவடிக்கைகள் எடுக்க முற்பட்டார். கைதடிப் பிரச்சனை தொடர்பாகக் காவலில் வைக்கப்பட்ட ஒடுக்கப்பட்டவர் சிலரைப் பிணையில் விடுவிக்கவும் உதவி செய்தார். இவை காரணமாக உயர் மட்டத்தினர் இவர் வீட்டிற்குக் கல் எறிய ஆரம்பித்தனர். இறுதியில் 10-6-79 இரவு இவர் வீடும் தீயிடப்பட்டது. தற்போது தமது தாயாருடன் ஒடுக்கப்பட்ட மக்கள் பகுதியில் வாழ்ந்து வருகிறார்; முன்னதாக இவர் சனசமூக நிலையக் கட்டடத்தில் சில மாதங்களாக நடத்திவந்த பிரத்தியேக வகுப்புகளில், இடையில் சில ஒடுக்கப்பட்ட பிள்ளைகளையும் சேர்த்துக்கொண்டார், இதன் காரணமாக உயர்மட்டம் கோபமடைந்து கடந்த மார்ச் மாதம் கட்டடத்தை வழங்க முடியாதென்று கூறி வகுப்புக்களை நிறுத்திவிட்டது. திரு இராமலிங்கம் தற்போது ஐ தே க. வின் சரணடைந்து ஒடுக்கப்பட்ட மக்களையும் அக் கட்சிபால் இழுத்து வருகிறார். இவர் பாதிக்கப்பட்டு வேலை விலகவேண்டி வந்த மொழிச்சட்டத்தால் பாதிப்புறுவோருக்கு நிவாரணம் வழங்காத ஐ. தே. க. அரசை—ஒடுக்கப்பட்ட கைதடி மக்களை இன்னும் ஒடுக்கிய பொலிசை ஏவுதற்குப் பொறுப்பான ஐ. தே. க. அரசை இவர் ஆதரிப்பதும் ஒடுக்கப்படும் மக்களையும் அவ் அரசின் பக்கம் இட்டுச் செல்வதும் விசனிக்கத்தக்கது.

இந்தக்கலவரத்தில் இன்னும் ஒரு சிறப்பான அம்சத்தைக் காணக்கூடியதாக உள்ளது. ஒடுக்கப்பட்டவர்கள் எப்படிச் சமூக ஒடுக்குமுறைக்காகச் சில பகிஷ்கரிப்புப் போராட்டத்தை நடத்தினார்களோ அதேபோல உயர் மட்டத்தவரும் ஒடுக்கப்பட்டவர்களைப் பொருளாதார ரீதியில் பாதிக்கும் சில பகிஷ்கரிப்பு வேலைகளைச் செய்தார்கள். கைதடியில் ஒடுக்கப்பட்டவர்கள் சீவும் கள்ளைக் குடிப்பதை நிறுத்தியதோடு இதுவரை காலமும் ஒடுக்கப்பட்டவர்கள் செய்துவந்த மீன் விற்கும் தொழிலைப் பாதிக்கும் பொருட்டு தாங்களே தங்களுக்கு மீனை விற்கும் தொழிலை மேற்கொண்டுள்ளார்கள். தொழில் புனிதமானது எல்லோரும் எல்லாத்தொழிலையும் செய்ய முடியும் செய்ய வேண்டும். ஆனால் மீன் எடுத்து விற்பது குறைந்த தொழிலாக அநேகமாக ஒடுக்கப்பட்டவர்கள் செய்யும் தொழிலாகக் கருதும் உயர்மட்டம், அத்தொழிலைத் தாங்களே செய்ய முன்வந்தது, அவர்களது பழிவாங்கும் மனநிலையை எடுத்துக் காட்டுகிறது. ஆனால் ஒருசில உயர்மட்டத்தவர்கள் இரகசியமாக ஒடுக்கப்பட்டவர்களிடம் கள்ளுக் குடிக்கப் போகிறார்களாம்.

இவ்வாறு பல துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் மத்தியில் கைதடி ஒடுக்கப்பட்டவர்கள் போர்க்கோலம் கொண்டிருப்பது விடுதலை உணர்வுடைய எவருக்கும் மகிழ்ச்சிக்குரியதாகும். இன்றும் ஒரு பதட்டமான சூழ்நிலை அங்கு இருப்பதனால் இப்பிரச்சனைக்குரிய தீர்வு என்ன என்பது கேள்விக்குரியதாகும். பொருளாதார ரீதியில் ஒடுக்கப்பட்டவர்கள் உயர்வடைந்தால் அன்றி, தங்களுக்கென்று அவர்கள் தொழில் துறைகளைக் கொண்டிருந்தாலன்றி, சிறு கைத்தொழில்கள், கிராமிய பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் செயல்பாடுகளால் அன்றி அவர்கள் பிரச்சனை தீர்க்கப்படாது. கோவில் திறக்கப்படுவதோ, விழாக்களில் சமஉரிமையோ, தேனீர்க்கடை, சிகை திருத்தகம், பொதுக்கிணறு போன்றவைகள் திறக்கப்படுவதிலோ சமபந்தி போசனம்; முன்னேற்றக் கல்யாணம், போன்றவைகளினாலோ, பிரச்சனை தீர்ந்துவிடும் என்று நாம் கருதவில்லை. இந்தத் தமிழ் ஈழத்தில் ஒரு தமிழனுக்கு எதைக்கொள்ள, கொண்டிருக்கப், பூரண உரிமை உடையதோ, அதேபோல் ஒவ்வொரு தமிழனும் அதைக்கொள்ளக் கொண்டிருக்க உரிமையுடையவன். இந்தச் சுதந்திர, சமத்துவ, சகோதரத்துவ ஒருமைப்பாடுடைய ஒரு நிலைமை உருவாக வேண்டும் என்றே, நாம் விரும்புகிறோம். ஆனால் சாதிக்கொடுமைக்கு எதிரான எத்தகைய போராட்டங்கள் நடைபெற்றாலும், அவை வரவேற்கத் தக்கவையே. அகிம்சைப் போராக இருந்தாலென்ன? ஆயுதப் போராட்டமாக இருந்தாலென்ன? தங்கள் உரிமைக்காக ஒடுக்கப்பட்ட மக்களே போராடவேண்டும். வேண்டுமானால் மற்றவர்கள் அவர்களுக்கு உதவி செய்யட்டும். கலகம் பிறந்தால்தான் நியாயம் பிறக்கும்; இந்த விடயத்தில் ஒவ்வொரு தமிழ் மகனும், தமிழ் மகளும், எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு, இதய சுத்தியோடு செயலாற்ற வேண்டும்;

அதேபோல் ஒடுக்கப்பட்ட மக்களும் எதிர்கால அரசியலில் விழிப்பாக இருக்கவேண்டும். தங்களுக்கு எத்தகைய ஒரு தமிழ் ஈழம் வேண்டும் என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவரும் ஓர் அணியின் கீழ் ஒன்று திரண்டு தமது மனித உரிமைக்காகப் போராட வேண்டும்; தங்களுக்கென்று ஒரு சரியான, நியாயத்திற்குத் துணிந்து ஒரு தலைமையை உருவாக்க வேண்டும். நசுக்கப்பட்டவர்களுக்கு நசுக்கப்பட்ட தலைவரே தலைமைதாங்க வேண்டும்; விளம்பரப் பிரசுரம், விளம்பரப் போராட்டம் நடத்துபவர்களின் மேல் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். எனவே தீண்டாமையை வேரறுக்கத் திரளுவோம். களம் அமைப்போம். கறை துடைப்போம். சாதியின் அழிவில் இனவிடுதலையின் முதற் படியைச் சந்திப்போம் இதைப்பற்றிக் கொஞ்சமாவது சிந்திப்போம், செயற்படுவோம்;

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## சாதிப்பாகுபாடு எப்படி வந்தது . . .

அந்தத்தெய்வீகத் தன்மையை அவனுக்கு வழங்கக் கூடிய வர்கள். பிராமணர் எனவும் கருத்துக்கள் உருவாக்கப்பட் டன. சத்திரியர் பிராமணர்களிலே கூடுதலாகத் தங்கியிருக் கும் நிலை உருவாகியது; ஆட்சியிலும் சமூகத்திலும் சட்ட திட்டங்களை வகுப்போராய்ப் பிராமணர் உயர்வுபெற, அவர்கள் வர்ண அமைப்பில் முதலாவது இடத்தைப் பிடித்துக்கொண்டு இரண்டாவது இடத்தைச் சத்திரியருக்கு வழங்கினர்.

நிலத்தோடும் பல்வகைக் கைத்தொழில்களோடும் சம்பந்தப்பட்ட சூத்திரருடன் வைசியரே நெருங்கிய தொடர்புகொள்ள வேண்டியிருந்தது. பிராமணருக்கோ, சத்திரியருக்கோ அத்தகைய தேவை இருக்கவில்லை; ஆகவே வைசியர் மேலும் தாழ்த்தப்பட்டவராக மாறினர்.

இந்தப் பரந்த நான்கு வர்ணப் பாகுபாட்டுக்குள் உப பிரிவுகள் தோன்றலாயின. அவரவர் தொழில்கள் பாரம் பரியத் தொழில்களாகச் செய்யப்பட்டதால், வேறு வேறு சாதிகள் வர்ணங்களுக்குள் உபபிரிவுகளாகத் தோன்றின. சாதி என்பதும் ஒரு சமஸ்கிருதச் சொல். பிறப்பு என்று அது பொருள்படும். பிறப்பால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிரிவில் அடங்கினர். பின்னர் இவர்களுக்கிடையிலான தொடர்புகள் குறித்தும் பிராமணர் சட்டதிட்டங்களை மேலும் மேலும் இறுக்கமாக வகுத்துச் சென்று இறுதியிலே தீண்டாமை என்னும் கோட்பாடும் உருவாகியது. தாழ்ந்த சாதியைச் சேர்ந்த ஒருவரைத் தீண்டுவதோ அவர் தீண் டியவற்றை உண்பதோ குற்றம் என்ற நிலை தோன்றியது; பின்னர் இது மேலும் மோசமடைந்து தாழ்த்தப்பட்டோ ரைக் கண்ணால் காண்பதே தோஷம் என்ற நிலை உரு வாகியது.

இப்படிப் படிப்படியாகப் பிராமணர் தம்மை வேறு படுத்தித் தம் நிலையை உயர்த்திக் கொண்டு சென்று சமூ கத்தில் ஒரு பிரிவினரை நிரந்தரமாக அடக்கிவைப்பதற் குக் காரணமாய் இருந்தனர்.

### தமிழர் மத்தியில்

பிராமணர் வகுத்த கோட்பாடுகள் தமிழ் மக்கள் மத்தியிலே கடந்த 1500 ஆண்டுக் காலத்துக்குள்ளேதான் பரவி இன்றைய நிலையை உருவாக்கின. அதற்குமுன் சங்க காலம்போன்ற காலங்களில் வர்ணப் பாகுபாடோ சாதிப் பாகுபாடோ இருக்கவில்லை; சாதிப்பாகு பாட்டு முறை பழந்தமிழர் பண்பாட்டுக்குப் புறம்பானது. பழந்தமிழர் பல குழுக்களாக குடிகள் என்ற பெயர்கொண்ட குழுக்க ளாக இயங்கினாலும் இன்றைய ஏற்றத்தாழ்வுகள் தீண் டாமைக் கருத்துக்கள் ஆகியவை இல்லாத இன்றைய குடிமக்கள் நிலையிலிருந்து பெரிதும் வேறுபடுகின்ற சமூக அமைப்பை உடையோராய் வாழ்ந்தனர்.

தொழிலின் அடிப்படையிலே தோன்றிய பிரிவுகள் ஆரியர் செல்வாக்கால் இறுக்கமான சாதிப் பிரிவுகளாகத் தமிழர் மத்தியில் மாற்றமடைந்தன. தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் உள்ள சாதிப்பிரிவினை தொழிலின் அடிப் படையிலே தோன்றியவை, பாரம்பரியமாகத் தொழில்கள் புரியப்பட்ட ஒரு காலத்தில் பிறப்பால் ஒரு வர் ஒரு குறிப்பிட்ட தொழிலைச் செய்யவேண்டிய நிலைக்கு ஆளாகினர்; ஆனால் அந்த நிலை இன்று இல்லை. பிறப் பால் மனிதர்களை உயர்ந்தோராகவும், தாழ்ந்தோராக வும் கொள்வதற்கு எந்தவித வரலாற்று அடிப்படையும் இல்லை. எந்தவித விஞ்ஞான அடிப்படையும் இல்லை. ★

## கைதடி கதை சொல்கிறது......

யும் அகிம்சையையும் கடைப்பிடித்து தங்களது தலைமைக் கந்தோரான சாவ. தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கத்தில் முறைப்பாடு செய்தனர்;

ஏனோ தானோ என்ற நிலையில் இயங்கிய சாவ. தெ. ப. பொ. உ. வி. கூட்டுறவு சங்க உயர் அதிகாரிகள் இது பற்றி எவ்வித கவனமும் எடுத்துக் கொள்ளவில்லை; இனியாவது இந்த அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் செலுத்துவார்களாக. நடந்த சம்பவங்களைப் பொறுக்க முடியாத சிறுபான்மையினர் பெரும்பான்மை மக்களின் மிளகாய் கன்றுகளைப் பிடுங்கி எறிந்தனர், இதனால் எதை யுமே எதிர்பார்த்திராத பெரும்பான்மையினர் சமாதா னத்திற்கு வழி தேடினர்; சாவகச்சேரி எம். பி; வி. என் நவரத்தினமும் சாவகச்சேரி பொலிஸ் இன்ஸ்பெக்டரும் சம்பங்களை நேரில் பார்த்து வேறு எவ்வித அசம்பா விதங்களும் நடைபெறாத அளவிற்கு சமாளித்து விட்டுச் சென்றனர்,

பொலிசாரும் எம்பியும் வந்து சமாளித்து விட்டு சென்ற பின்னரும் சிறுபான்மை மக்கள் சீவும் கள்ளுப் பாளையை வெட்டி விட்டார்கள். பெரும்பான்மையினர் பாளையை வெட்டிய பிறகும் பகுத்தறிவுள்ள சிறுபான்மை இனமக்கள் தங்கள் அன்பையும் அகிம்சையையும் கைவிட இல்லை. இந்த நிலையில் சிறுபான்மை இனமக்களைச் சாட்டி வேறவர்கள் பெரும் பான்மையினரின் மிளகாய் கன்று களை நாசமாக்கினர். விளைவு சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் சிறுபான்மை மக்கள் மிளகாய்த் தோட் டத்தை அழித்து விட்டார்கள் எனமுறையிடப்பட்டது. இதற்கு உடந்தையாக சிங்கள பெண்ணும் இருந்தாள். அவரின் முறைப்பாடு கிடைத்தவுடன் சாவகச்சேரி பொலிஸார் சிறுபான்மை மக்களை கைதுசெய்து நீதி நியாயமற்ற முறையிலே இம்சித்தார்கள் பாளை வெட்டி யவனுக்கு தண்டனை இல்லை அப்பாவிச் சிறுபான்மைத் தமிழனுக்கு சட்டத்திலும் வஞ்சனை செய்யும் தார்மீகம் பேசும் ஐ. க. வினரே தகுந்த நடவடிக்கை எடுப்பீர் களா... ? ★

நா. சொ. தமிழ்ஈழசெல்வன்
கைதடி மேற்கு, கைதடி.



# கைதடி கதை சொல்கிறது

[கைதடி மேற்கிலிருந்து எமக்கு வந்த கடிதமொன்றை அப்படியே தருகிறோம். இதில் உள்ள கருத்துக்கள் யாவும் மனிதனின் கருத்தல்ல. எமது ஆய்வு "கைதடிக் கலம்பகம்" கட்டுரையில் தனியாகத் தரப்பட்டுள்ளது.]

மனிதன் ஆசிரியர் அவர்கட்கு,

கைதடியில் நடைபெற்றுவரும் சாதிக்கலவரம் என்பது இன்று தனிப்பட்ட பிரச்சனைபோல் அதற்கு மாற்றுருவம் கொடுத்து அப்பாவி சிறுபான்மைத் தமிழர்களை நீதியற்ற முறையிலே இம்சிக்கிறார்கள் பொலிஸார்கள். குற்றம் புரியாமலே இன்று தண்டனை அளிக்கிறது தார்மீக அரசினரின் காவல்படையினர். ஆம் ஒரு இனம் சுதந்திரமாக தன்னைக் கட்டிக் காத்துக்கொள்ள உரிமையுண்டு. இந்த வகையிலே சிறுபான்மை இன மக்கள் பண்டைக்காலம் தொட்டே பெரும்பான்மை இனத்தவருக்குக் கைக்கூலிகளாகவும் அடிமைகளாகவும் வாழ்ந்து வந்தனர். எனவே இந்த நிலைமையை மாற்றியமைத்து சிறுபான்மை மக்களும் கௌரவத்துடன் வாழவேண்டுமென்ற கோதாவிலே சில இளைஞர்கள் சாதிமத பேதமற்ற சமநீதியாக வாழ்வதற்கு வழிவகைதேட உத்தேசித்தார்கள் இந்த வகையிலே பெரும்பான்மைத் தமிழர் ஒருவர் இறந்துவிட்டால் அவர்களின் உடலைத் தகனம் செய்வதற்கு சிறுபான்மைத் தமிழர்கள்தான் கட்டை தறித்து மயான வேலைகளை எல்லாம் கவனிப்பார்கள். எனவே இந்த வேலையை அவர்கள் செய்வதினால் இது அவர்களுக்கு இழுக்கு என்பதையுணர்ந்த இளைஞர்கள் அன்பையும் அஹிம்சையையும் கடைப்பிடித்து இரத்தம் சிந்தாமல் ஆயுதப் போராட்டம் இல்லாமல் தம் சாதியைத்தாமே கட்டுப்படுத்திக் கொண்டனர். உண்மையிலே இது வரவேற்கக்கூடிய ஒன்றாகும். தங்கள் கிணற்றிலே தண்ணீர் அள்ளினால் துடக்கு வீட்டிற்குள் சென்றால் துடக்கு என்று வேற்றுமை காட்டுபவர்களுக்கு கட்டை தறித்துக் கொடுக்கத்தான் வேண்டுமா?

கேவலம் கிணறு வெட்டவும், வீடு கட்டவும் உதவிய சாதியை வீடு கட்டி முடிந்தவுடன் ஏன் உள்ளே விடக் கூடாது. வீடு கட்டு மட்டும் மேசன்கள் வீடுகட்டி முடிந்தவுடன் சாதியில் குறைந்தவன்... என்ற காரணமா...?

இது இவ்வாறு இருக்க கைதடியில் பிரசித்தி பெற்று விளங்கும் ஆலயம் பிள்ளையார் கோயிலாகும். இந்த கோயிலின் வருடாந்த உற்சவம் அண்மையிலே நடைபெற்றது: அன்று பிள்ளையார் தேரிலே உலாவப்போகின்ற காட்சி தேர் இழுப்பதற்கு மக்கள் எல்லோரும் ஆயத்தமாகினர் இம் மக்களிலே சிறுபான்மை மக்களும் தேரினை இழுப்பதற்கு ஆயத்தமாகினர். உடனே தேரினை இழுக்க விடாமல் திற்பாட்டினர்கள் கோயில் நிருவாகிகள் என்று சொல்லிக்கொள்ளப்படும் சாதி வெறி பிடித்த கைதடி சமாதான நீதவானும், கைதடி கிராமசபையின் விசேட ஆணையாளரும், அந்த வேளையிலும் அன்பையும் அகிம்சையையும் கடைப்பிடித்து அமைதியாகத் தங்களது உரிமைகளைக் கேட்டனர் சிறுபான்மையினர். இவற்றைச் சமாளிக்க முடியாத சமாதான நீதவானும் (பெயரளவில்) விசேட ஆணையாளரும் முழித்தனர். உடனே பொலிசாரை அழைத்து நிலமையை விளக்கினர். பொலிசாரினாலும் கட்டுப்படுத்த முடியாமல் போய்விட்டது. இறுதியில் பகுத்தறிவுள்ள ஒதுக்கப்பட்டவர்கள் "நீங்கள் தேரை இழுங்கள். நாங்கள் வரவில்லை. எனக் கூறவும் பெரிய மனது படைத்தவர்கள் என வெளியுலகம் நம்பிக்கொண்டிருக்கும் பெரும்பான்மையினர். தேரினை இழுக்காமல் பிள்ளையாரைத் தேரில் இருந்து இறக்கி கோயிலுக்குள் கொண்டு சென்றனர். இத்தகைய சிறிய விடயங்களைச் சமாளிக்க முடியாதவர்கள் சமாதான நீதவான்களாகவும் ஆணையாளராகவும் இருப்பதை விட தங்கள் பதவிகளை ராஜினாமாச் செய்வது நல்லது.

மேற்பார்த்த விடயத்தில் இருந்து ஒதுக்கப்பட்டவர்கள் கற்றுக்கொண்ட விடயம் தற்செயலாக தனிநாடு கிடைத்தால் இதைவிடக்கேவலமாக தாங்கள் நடாத்தப்படுவோம் என்பதை உணரக்கூடியதாக உள்ளது, மேலே கூறிய சமாதான நீதவான் கூட்டணியின் முக்கிய பிரமுகராகும். எனவே இவரைப்போன்ற போலி மனிதர்களைக் கூட்டணியில் வைத்திருப்பதால் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொள்கைகளுக்கு அவமானத்துக்குரியதாகும். எனவே இவர்களைப்போன்ற சுயநலவாதிகளை கூட்டணியின் தலைமைப்பீடம் கவனிக்குமா...?

மேற்கூறிய நிகழ்ச்சிகள் யாவும் முடிவடைந்த பின் இரண்டாவது பெரும்பான்மை இனத்தவர் என்று சொல்லிக் கொள்ளப்படுபவர்களிடையே ஒரு மரணம் நடந்தது: அங்கும் ஒதுக்கப்பட்டவர்களைக் கட்டை தறிக்க விடாது தடுத்தபோதிலும் ஒரு சிலர் சென்று கட்டைகளைத் தறித்து அவர்களின் மயான வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்த சமயம் சில இளைஞர்கள் தம்மவரைத்தாமே பேசி அவ்விடத்தை விட்டுக் கலைத்து விட்டனர்: இந்நிகழ்ச்சிக்குப்பின் கொதிப்படைந்து கொண்டிருந்த இரண்டாவது பெரும்பான்மைத் தமிழர்கள் ஒதுக்கப்பட்ட மக்களின் மரங்களில் ஏறி அவர்கள் சீவும் கள்ளுப் பாளைகளை வெட்டி வீழ்த்தினர்:

பாவம் சீவல் தொழிலையே நம்பி வாழும் அப்பாவிச் சிறுபான்மைத் தமிழரின் வயிற்றில் அடித்து விட்டார்கள்: உயிரைப் பணயம் வைத்து உயரேறிக் கீழிறங்கும் எதுவுமே அறியாத சீவல் தொழிலாளிகளின் வாழ்வு பறிக்கப்பட்டதை எண்ணும் பொழுது அவர்களால் எப்படி அதனைத் தாங்க முடியும். பெரும்பான்மைத் தமிழரை எதிர்க்கக் கூடிய பலம் இருந்தும் சிறுபான்மை இன மக்கள் அன்பை

11 ←

இப்பிரசுரம் பண்டத்தரிப்பு பிரதான வீதியிலுள்ள திரு. அ. விமலதாசன் என்பவருக்காக யாழ்ப்பாணம் 102, பிரதான வீதியிலுள்ள சென். ஜோசப்பின் அச்சகத்தில் அச்சிட்டு 30-6-79-ல் வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the G. P. O; Under no Q. D. 8925/78,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media